செ.வெ.எண்:500 30.6.08

பத்திரிகைச் செய்தி

இந்தியப் புள்ளியியல் தந்தை எனப் போற்றப்படும் பேராசிரியர் பிராசந்த சந்திர மகலநோபிக அவர்களின் பிறந்த நாளான ஜுன் திங்கள் இருபத்தொன்பதாம் நாளை புள்ளி இயல் நாளாக 2007 ஆம் ஆண்டில் நடுவண் அரசு அறிவித்தது. விழாவினையும் எடுத்தது. இந்திய மாநிலங்களிலேயே முதன்முதலாக தமிழ் நாடு அரசின் மாநிலத் திட்டக்குழு இவ்விழாவினை ஜுன் 30ந் தேதி நடத்தி பேராசிரியர் பிராசந்த சந்திர மகலநோபிக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அளித்த பங்களிப்பினை நினைவு கூர்கிறது. இந்த ஆண்டு பேராசிரியர் மகலநோபிசின் 115ஆம் பிறந்த நாளாகும். கொல்கத்தாவில் உள்ள இந்தியப் புள்ளியியல் நிறுவனம் அவரால் நிறுவப்பட்டது. "சங்கியா" எனும் இந்தியப் புள்ளியியல் இதழை பதிப்பிக்கவும் வழி வகுத்தார். பேராசிரியர் மகலநோபிசின் முக்கிய படைப்புகள், நமது நாட்டிற்கு உலக புள்ளியியல் வரைபடத்தில் மேன்மை நிலையை அளித்துள்ளது. மத்தியப் புள்ளியியல் நிறுவனம், தேசிய மாதிரி ஆய்வு நிறுவனம் ஆகியன அவரின் பங்களிப்பால் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. பெரிய அளவிலான புள்ளியியல் கணக்கெடுப்பு, மாதிரி ஆய்வு, பயிர் விளைச்சல் அறுவடை ஆகியனப் பற்றி அவரின் ஆய்வுகள் இந்திய புள்ளியியல் துறைக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் மாநிலத் திட்டக்குழு, பேராசிரியர் பிராசந்த சந்திர மகலநோபிக அவர்களைப் போற்றும் வண்ணம் 30.06.2008 அன்று புள்ளியியல் நாளை, பொருளியல் புள்ளியியல் துறை, மற்றும் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து இந்த ஆண்டு விழாவினை சிறப்புற அமைத்துள்ளது. பொருளாதாரத் திட்டமிடல், கொள்கை உருவாக்குதல் போன்றவற்றில்

புள்ளிஇயலின் முக்கியத்துவத்தை பொது மக்களிடமும், இளைய சமுதாயத்தினிடமும் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவது தான் இவ்விழாவின் முக்கிய குறிக்கோளாகும்.

மாநிலத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை ஏற்றார்.

பேராசிரியர் மு. நாகநாதன் தன் உரையில் பேராசிரியர் மகலநோபிசின் ஆரம்பக் கல்வியையும் கணித மேதை சீனிவாச இராமனுஜம் அவர்களோடு இருந்த தொடர்பையும் குறிப்பிட்டார். தேசிய கவிஞர் என்று போற்றப்பட்ட ரவீந்தரநாத் தாகூருக்கும், பேராசிரியர் மகலநோபிசுக்கும் உள்ள தொடர்பினையும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு புள்ளியியல் அடிப்படையில் அவர் அளித்த திட்ட அறிக்கைப் பற்றியும் குறிப்பிட்டார். தேசிய புள்ளிஇயல் ஆணையம் மாநிலப் புள்ளிஇயல் குழு ஆகியன அமைக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடும்பொழுது, துணைத் தலைவர் தமிழக அரசின் பொருள்இயல், புள்ளிஇயல் துறையின் வலுவான தகவல் வளத்தைப் பற்றி எடுத்துரைத்தார். இந்தியா போன்ற பெரிய நாடுகளில் புள்ளிவிவரம் சேகரிப்பதில் உள்ள சிக்கல்களை தெரிவித்த அவர், புள்ளிஇயலாளர்களுக்கு அறிவியல் பூர்வமான அணுகுமுறையில் இடைவிடாத, முறையான பயிற்சி அளிக்கப்படவேண்டியதன் தேவையினையும் சுட்டிக் காட்டினார். மாநிலத் திட்டக்குழுவின் பணிகளாக திட்டமிடல், கொள்கை வகுத்தல் மற்றும் நிகழ்காலத்திய பிரச்சினைகளுக்கு அரசுக்கு ஆலோசனைகள் வழங்குதல் போன்றவற்றை குறிப்பிட்டார்.

நடுவண் அரசின் புள்ளிஇயல், திட்ட செயலாக்கத்துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. ஜி.கே.வாசன் குத்துவிளக்கு ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்து புள்ளிஇயல் நாள் விழா கொண்டாடுவதில் மாநிலத் திட்டக்குழு எடுத்துள்ள முன்முயற்சி தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். சென்னையிலுள்ள இந்தியப் புள்ளிஇயல்

நிறுவனத்தின் பிரிவு, தில்லி மற்றும் பெங்களூரு மையங்களுக்கு இணையான மையமாக நிலை உயர்த்தப்படும் என்று அறிவித்தார். இம்மையம் இளநிலை, முதுநிலை வகுப்புகள் நடத்தவும், தென்னிந்தியாவின் புள்ளிஇயல் தேவைகளை நிறைவு செய்யவும் உதவும் என அறிவித்தார்.

அமைச்சர் தனது துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விவரித்தார். சமீபத்தில், ஐந்தாவது பொருளாதார கணக்கெடுப்பினையும், எட்டாவது வேளாண் கணக்கெடுப்பு பணியினையும் முடித்ததில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று கூறி தமிழக பொருள்இயல், புள்ளிஇயல் துறையை பாராட்டினார். மேலும் தமிழ்நாட்டின் அனைத்து கிராமங்களுக்கும் கிராம அளவில் நிலப் பயன்பாடு குறித்த புள்ளிவிவரங்கள் கணினி மயமாக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி மகிழ்ந்தார். இத்துறை இந்திய ரிசர்வ் வங்கியுடன் இணைந்து இந்திய வீட்டுப்புள்ளிவிவரக் குறியீடு (Housing Startup Index) கணக்கிட செயல்முறை வகுத்ததில் முக்கியப் பங்காற்றியுள்ளதைப் பாராட்டினார். தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும் மாநில அரசு சிறந்த முயற்சி மேற்கொண்டு வருகிறது எனவும் பாராட்டி மகிழ்ந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சு. இராமச்சந்திரன் அவர்கள் பொருள்இயல், புள்ளிஇயல் துறை தயாரித்த '' Tamil Nadu through Statistics 2008'' என்ற நூலினை வெளியிட்டுச் சிறப்பித்தார். இவ்வெளியீடானது பேராசிரியர் மகலநோபிசிற்கு தகுந்த பெருமை சேர்க்கும் செயல் என்று குறிப்பிட்டு, இவ்வகையான வெளியீடுகளை வழங்கிடும் தமிழக அரசிற்கு பாராட்டு தெரிவித்தார்

நடுவண் அரசின் புள்ளிஇயல் துறையின் செயலர், தலைமைப் புள்ளிஇயலாளர் முனைவர் பிரணாப் சென் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பொருளாதாரத் திட்டமிடலில்

புள்ளிஇயலின் பங்கையும், பாலின புள்ளி விவரங்கள் தயாரித்தலின் முக்கியத்துவத்தினையும் விளக்கினார்.

முன்னதாக, பொருள்இயல், புள்ளிஇயல் துறையின் சிறப்பு ஆணையர் திருமதி ஷீலா பிரியா இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நல்கினார். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் முனைவர் அனுராதா கட்டி இராஜீவன்.இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை நவின்றார்.

தமிழகத்தின் பல்வேறு சமூக பொருளாதாரப் புள்ளிவிவர விளக்கப்படங்கள், வரைபடங்கள் கொண்ட கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புள்ளி விவரங்களைப் பரவலாக்குதல், புள்ளிவிவரச் செயல்முறைகள் மற்றும் பாலின புள்ளிவிவரங்கள் முதலான மூன்று தலைப்பின்கீழ் கருத்துப் பரிமாற்றல் நிகழ்ச்சி நடைபெற்றது. இத்தலைப்புகளுக்கு முறையே பொருள்இயல், புள்ளிஇயல் துறையின் முனைவர் எம்.முருகன், காசநோய் ஆராய்ச்சி மையத்தின் முனைவர். பி.வெங்கடேசன் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எஸ்.கே.சாந்தி, ஆகியோர் தலைமை வகித்தனர். இறுதியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் புள்ளிஇயல் துறைத் தலைவர் பேராசிரியர் ஜி.கோபால் இக்கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சியின் சாரத்தைத் தொகுத்தளித்தார்.

இத்துடன் புள்ளிஇயல் நாள் விழா இனிதே நடந்தேறியது.